# கம்பம் நகராட்சி

**2022-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் (27.10.2022)ஆம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கம்பம் நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும் அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.** **கூட்டப்பொருள்**

| | |
|---|---|
| 1) | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 09/2022-ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். |
| | தீர்மான எண். 171 பதிவுசெய்யப்பட்டது. |
| 2) | நகராட்சி பொறியாளர் அவர்களின் 09/2022-ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். |
| | தீர்மான எண். 172 பதிவுசெய்யப்பட்டது. |
| 3) | **தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதிகள்** 2022-**இன்படி, வார்டு குழு மற்றும் பகுதி சபா குழுக்கள் அமைத்தல் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள** 30.08.2022-**ஆம் தேதிய இந்நகர்மன்ற தீர்மான எண்**.131 **பதிவு செய்யப்பட்டதன் தொடர்ச்சியாக, ஒவ்வொரு வார்டுக்கும் நகர்மன்ற உறுப்பினர்களை தலைவராகக் கொண்டு வார்டு குழு அமைத்தல் மற்றும் பகுதி சபா உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து குழு அமைப்பதற்காக ஒவ்வொரு வார்டிலும் நான்கு பகுதி சபாக்கள் தெருக்கள் வாரியாக பகுதிகளின் எல்லைகள் வரையறை செய்யப்பட்டுள்ளதற்கும், மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ததற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், இதன்படி கம்பம் நகராட்சி பகுதியில்** 1 **முதல்** 33 **வார்டுகளுக்கும் நியமிக்க வரப்பெற்றுள்ள வார்டு குழு / பகுதி சபா உறுப்பினர்கள் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது**. |
| | அலுவலகக்குறிப்பு **:**1) **வார்டு** 1 **முதல்** 33 **வரை தெருக்கள் வாரியாக பகுதிகளின் எல்லைகள் வரையறை செய்ததற்கும், மாவட்ட அரசிதழ் பிரசுரம் செய்ததற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.**<br>2) **வார்டு** 1 **முதல்** 33 **வரை வார்டு பகுதி சபா உறுப்பினராக நியமிக்க வரப்பெற்றவர்கள் அனைவரும் விருப்பம் தெரிவித்துள்ளதாலும், உரிய தகுதியுடன் உள்ளதாலும் உறுப்பினர்களாக நியமனம்செய்யமன்றம் ஒப்புதல்வழங்கலாம்.**<br>(ந.க.எண்.2354/2022/பி1) |
| | தீர்மான எண். 173 1) அலுவலகக்குறிப்ப அனுமதிக்கப்பட்டது<br>2) உறுப்பினர் பட்டியல் ஏற்கப்பட்டது |
| 4) | 2022-2023 –**ஆம் ஆண்டிற்கு பொதுநிதியின் கீழ், கம்பம் நகராட்சியில் பொதுப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் நகல்பெருக்கி** (**ஜெராக்ஸ்**) **இயந்திரங்களுக்கு டோனர் பவுடர் தீர்ந்துவிட்டது. எனவே புதிதாக டோனர் பவுடர் போடுவதற்கு தேவையான பவுடர் இருப்பில் இல்லாததால்,** 5 **கிலோ பவுடர் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ**.20,000/-**க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது**. |
| | அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்<br>**2)** அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று மேற்காணும் பொருள் கொள்முதல் செய்வதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1632/2015/இ1) |

| | |
|---|---|
| | தீர்மான எண். 174 அனுமதிக்கப்பட்டது |
| 5) | சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர், மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மற்றும் தேனி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் காணொளி காட்சி மூலம் ஆய்வுக்கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கம்பம் நகராட்சியில் தற்சமயம் மடிக்கணினி மற்றும் மல்டிமீடியா ஒலிபெருக்கிகள் மற்றும் BSNL இணைப்பு மற்றும் தனியார் வலையமைப்புகள் மூலம் இணைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது கம்பம், சின்னமனூர் மற்றும் கூடலூர் நகராட்சி ஆணையர்கள் மற்றும் பல்வேறு பிரிவு அலுவலர்களும் கூட்டத்தில் ஒரே சமயத்தில் கலந்துகொள்ள சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே காணொளி கருத்தரங்கு அமைப்பதற்கு இந்நகராட்சியில் போதிய வசதி இல்லாததால் அகல் திரை, வலையமைப்பு [Projector], அருகலை(Wifi) கணினி போன்றவற்றை புதியதாக வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) 2022-2023-ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ், மேற்படி செலவினம் மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.3646/2019/இ1 |
| | தீர்மான எண். 175 அனுமதிக்கப்பட்டது |
| 6) | இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.3-இல் உள்ள சமுதாயக் கூடத்தினை அனுபவித்துக் கொள்ளும் குத்தகை உரிமத்திற்கான பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.3894/2020/அ2, நாள்.05.09.2022-இல் கோரப்பட்டதில் 16.09.2022-இல் நடைபெற்ற பொதுஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் பொது ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.<br><br>(வ.எண். \| பெயர் (திருவாளர்கள்) \| ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.)<br>1) \| எம். சொக்கர் த/பெ.மொக்கையத்தேவர் 119/2W சுவாமி விவேகானந்தர் தெரு உத்தமபுரம், கம்பம். \| 141000<br>2) \| மனோகரன் 2/3, உலகத்தேவர் 6வது தெரு, உத்தமபுரம், கம்பம் \| 126000<br><br>மேற்படி குத்தகை இனத்திற்கு 16.09.2022-இல் நடைபெற்ற பொது ஒப்பந்தப்புள்ளியல் திரு.எம். சொக்கர் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப் புள்ளியாக ரூ.141000/- கோரப்பட்டது. பொதுஏல நிபந்தனைகள் பிரிவு 13 (அ) ஏலம்/ஒப்பந்தப்புள்ளி முடிந்த பிறகு ஏலக்கேள்விகள் 1920-ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட மாவட்ட நகராட்சிகள் சட்டம் 68-ஆம் பிரிவின்படி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி முடிந்த பின்பு முன்னதாக ஒப்பந்தப்புள்ளி கேட்கப்பட்ட உயர்ந்தபட்ச கேள்வித் தொகையை விட 25சதவீதம் கூடுதலான தொகைக்கு திரு.பி.கே.திருப்பதி என்பவரால் ரூ.175000/-க்கு 24 மணி நேரத்திற்குள் எழுத்து மூலம் சம்மதித்து கோரப்பட்டது. இதனடிப்படையில் ரூ.175000/- ஆரம்ப கேள்வியாக கொண்டு இவ்வலுவலக மறுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.3294/2020/அ2, நாள்.22.09.2022-ன்படி 07.10.2022-க்கு மறுஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதனை தொடர்ந்து 07.10.2022-இல் நடைபெற்ற பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் எவரும் ஏலம் கோராத நிலையில் திரு.பி.கே. திருப்பதி என்பவர் ரூ.176089/-க்கு உயர்ந்தபட்ச கேள்வியாக ஒப்பந்தப்புள்ளி மூலம் கோரப்பட்டுள்ள தொகை இதற்கு முன்னதாக கோரப்பட்ட தொகையை விட கூடுதலாக உள்ளது. எனவே 7வது முறை வரப்பெற்ற உயர்ந்தபட்சஒப்பந்தப்புள்ளி கேள்வியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு** : மேற்படி குத்தகை இனத்திற்கு தொடர்ந்த 06.04.2022, |

| | |
|---|---|
| | 04.08.2022, 12.08.2022, 23.08.2022, 02.09.2022, 16.09.2022 மற்றும் 07.10.2022 ஆகிய தேதிகளில் 7முறை பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 7வது முறையாக வந்த உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியாக கோரப்பட்ட திரு.பி.கே.திருப்பதி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். (**ந.க.எண்**.3294/2020/**அ**2) |
| | தீர்மான எண். 176 அனுமதிக்கப்பட்டது |
| 7) | அரசாணை எண்.70, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.13.09.2021 மற்றும் இந்நகர்மன்ற தீர்மான எண்.2323, நாள்.21.09.2021-இன்படியும்கம்பம்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையினை நவீனகட்டமைப்பு வசதிகளுடன் ரூ.7.75கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டுப்பணிகள் நடைபெற்று வருவதனை ஒட்டி வாரச்சந்தை முன்புறமுள்ள IUDP கடைகள் -14, உணவகம்-1 மற்றும் கடை-1 ஆகிய 16 கடைகளையும் 30.09.2022-ஆம் தேதிக்குள் காலி செய்து நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய அறிவுறுத்தி சம்மந்தப்பட்ட கடை உரிமதாரர்களுக்கு முறையாக அறிவிப்பு சார்பு செய்யப்பட்டது. அதன்படி, கடைகளின் உரிமதாரர்கள் 30.09.2022-க்குள் மேற்கண்ட கடைகளை காலி செய்து பொறியியல் பிரிவு வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. தற்போது கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதால் IUDP கடைகள் 14 (வரிவிதிப்பு எண்கள். 1020, 1022 முதல் 1084 வரை )உணவகம்-1 ( வரிவிதிப்பு எண்.1085), ஆர்.சி.எச் கடை-1 (வரிவிதிப்பு எண்.1089) ஆகிய 16 கடைகளுக்கு 01.10.2022 முதல் மேற்படி கட்டுமான பணிகள் முடித்து உரிமதாரர்களுக்கு ஒப்படைக்கப்படும் வரை கணக்கிலிருந்து கேட்பு நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.3294/2020/அ2) |
| | தீர்மான எண். 177 அனுமதிக்கப்பட்டது |
| 8) | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TATA ACE - வாகன எண். TN 60 AW 8353-இல் பழுதினை சரிசெய்யவும் மற்றும் ஆயில் சர்வீஸ் செய்யவும் இவ்வலுவலக விலைப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.1940/2022/எச்1 நாள்.10.10.2022-இன்படி விலைப்புள்ளி கோரியதில் 17.10.2022 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு.<br><table><tr><td>வ.எண்.</td><td>நிறுவனத்தின் பெயர்</td><td>குறிப்பிடப்பட்டுள்ள தொகை ரூ.</td></tr><tr><td>1)</td><td>நவீன் ஆட்டோ ஒர்க்ஸ், கம்பம்</td><td>39738/-</td></tr><tr><td>2)</td><td>சின்சியர் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், கம்பம்</td><td>43230/-</td></tr></table>மேற்கண்டவற்றில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள நவீன் ஆட்டோ ஒர்க்ஸ், கம்பம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம். |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் ஏற்கலாம் (ந.க.எண்.1940/2022/எச்1) |
| | தீர்மான எண். 178 அனுமதிக்கப்பட்டது |
| 9) | இந்திய திருநாட்டின் 75-வது ஆண்டில் சுதந்திர தின அமுதபெருவிழாவை கொண்டாடும் முன்னிட்டு இந்து தமிழ் திசை நாளிதழில் வாழ்த்துசெய்தி வெளியிட்டதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.15,000/-ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1479/2022/எச்1) |
| | தீர்மான எண். 179 அனுமதிக்கப்பட்டது |
| 10 | இந்நகராட்சிக்கு வார்டு எண்07 சுவாமி விவேகானந்தர் தெருவில் புதிதாக கட்டப்பட்ட 3.00 இலட்சம் லிட்டர் கொண்ட மேல்நிலை நீர் தேக்க |

| | |
|---|---|
| | தொட்டிக்கு,சுருளிப்பட்டி மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் லோயர்கேம்ப் மேல்நிலை நீர்தேக்க தொட்டியிலிருந்து வருகின்ற குடிநீரினை நீரேற்றம் செய்யும் பொருட்டு உள்ளிணைப்பு பணிகள் செய்திட 29.07.2022-ஆம் தேதிய நகர்மன்ற தீர்மான எண்.116-இல் 2021-2022 குடிநீர் வடிகால் வாரிய விலை விகித அட்டவணை படி ரூ.8.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து 17.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரவில்லை. தொடர்ந்து மறுஒப்பந்தப்புள்ளி 07.09.2022-இல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரவில்லை. மேலும் துணைஆணையர் (வருவாய் மற்றும் நிதி) நாள் 01.08.2022ல் GST வரியினை 12% லிருந்து 18% ஆக உயர்த்த உத்திரவிடப்பட்டதையடுத்து 2022-2023ம் ஆண்டு குடிநீர் வடிகால் வாரிய விலை விகிதத்தின் படி திருத்திய மறு மதிப்பீடு ரூ9.90 இலட்சமாகஉயர்ந்ததை நகர் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.இதனைத் தொடர்ந்து நகர் மன்ற தீர்மான எண் 116 நாள் 29.07.2022 நிர்வாக அனுமதி வழங்கியதை ரத்து செய்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு :1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2022-2023ன்கீழ் மேற்கொள்ளவும்மன்றம்அனுமதித்தலாம்.(ந.க.எண்.1430/2022/இ2 |
| | தீர்மான எண். 180 அனுமதிக்கப்பட்டது |
| 11 | நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை அரசாணை (நிலை) எண்.145 நாள். .14.10.2022-இன் அரசாணையில், கம்பம் நகராட்சி பகுதிகளில் உள்ள 1817 எண்ணிக்கை தெருவிளக்குகள் LED ஆற்றல் மிகு தெருவிளக்குகளாக மாற்றம் செய்வதற்கு ரூ.201.55 இலட்சம் மாநில நகர்ப்புற அடிப்படை மேம்பாட்டு நிதியின் (SUIDF) கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இத்திட்டநிதியினை இந்நகராட்சிக்கு கடனாக வழங்குவதுடன், இக்கடனை ஆறு அண்டுகளுக்குள் 5 சதவிகித வட்டியுடன் (ஆண்டிற்கு) (5%PerAnnum) திரும்ப செலுத்துவதற்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட அரசாணையின்படி, கம்பம் நகர் பகுதியில் 1817 எண்ணிக்கை தெருவிளக்குகளை LED ஆற்றல் மிகு தெருவிளக்குகளாக மாற்றம் செய்வதற்கான நிதியினை கடனாக தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO) மூலம் பெறுவதற்கு இக்கடன் தொகையை ஆறு வருடங்களில் 5 சதவிகித வட்டியுடன் (ஆண்டிற்கு) (5% Per Annum) திரும்ப செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2330/2022/இ1) |
| | தீர்மான எண். 181 அனுமதிக்கப்பட்டது |
| 12 | **இந்நகராட்சியில் நீண்ட காலமாக நிலவி வந்த பொது மக்களின் குடிநீர் பற்றாக்குறையை போக்க நகராட்சிக்கென தனி கூடுதல் குடிநீர் திட்டம் சுருளிப்பட்டி ரோடு முல்லையாற்றில் உறைகிணறு அமைத்து** 23.09.2014 **முதல் நகர மக்களுக்கு குடிநீர் குறைவின்றி பம்பிங் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் திட்டத்தில் உள்ள** 8 **மின் விசை மோட்டார்களை உரிய தொழில் நுட்ப பணியாளர்களை கொண்டு இயக்குதல் பணிகளை செய்திட** 2022-2023-**ஆம் ஆண்டிற்கான வருடாந்திர ஒப்பந்த பணிக்காலம்** 30.09.2022-**இல் முடியும் நிலையில் தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும்வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாத வகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின்படி, தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.எல்.இராஜேந்திரன் என்பவர் தொடர்ந்து** 1 **மாத காலத்திற்கு** 01.10.2022 |

**முதல்** 31.10.2022 **வரை பணிகள் மேற்கொள்ளவும்**, **இதற்கான உத்தேச மதிப்பீடு கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும்** ESI, EPF, G.S.T உட்பட தொகை ரூ.77,000/-க்கு (ரூபாய் எழுபத்தி ஏழாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் விவரம் | மாதம் மொத்த பணியாளர் | 1 நபருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் | மாத மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் 3 நபர் | 30 x 3 = 90 | 568 | 51120 |
| 2 | காவலர் 1 நபர் | 30 x 1 = 30 | 426 | 12780 |
| | | | மொத்தம் | 63900 |

**அலுவலகக்குறிப்பு**: 1) **மன்றம் அனுமதிக்கலாம்**.
2) **மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி** 2022-2023-**இன்கீழ் மேற்கொள்ளவும்மன்றம் அனுமதிக்கலாம்** (**ந.க.எண்**.1136/2020/**இ**2)

தீர்மான எண். 182 அனுமதிக்கப்பட்டது

13 இந்நகராட்சி லோயர் கேம்ப் குடிநீர் திட்டம் ரூ.18.80 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் செயல்படுத்தி பணிகள் முடித்து நகராட்சி வசம் 17.04.2020-ஆம் தேதி முதல் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி திட்டத்தை நகராட்சி மூலம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாததால் வருடாந்திர ஒப்பந்த அடிப்படையில் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட ரூ.44.00 இலட்சம் மதிப்பீட்டில் உரிய மன்ற அனுமதி மற்றும் நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் குறிப்பிட்டுள்ள எல்.ராஜேந்திரன் என்பவருக்கு இவ்வலுவலக ந.க.எண்.1136/2020/இ2, நாள்.01.12.2020-ஆம் தேதியிட்ட செயல்முறை ஆணையில் 01.12.2020 முதல் 30.11.2021 முடிய லோயர் கேம்ப் குடிநீர் திட்டத்தை இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் செய்திட அனுமதித்து உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.29156/2019/DO2. நாள்.22.10.2020-ஆம் தேதிய கடிதத்தில் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் செய்திட ஏற்கனவே உள்ள ஒப்பந்ததாரரின் செயல்பாடுகளில் குறைபாடுகள் ஏதுமில்லாத நிலையில் தொடர்ந்து நீட்டித்து கொள்ளலாம் என அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது குடிநீர் அத்தியாவசிய பணிகளுக்கான பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் கொண்டு வருவதற்கான உரிய கருத்துரு சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் கோரப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், இதற்கான உரிய வழிகாட்டுதல் மற்றும் அனுமதி வரும் வரை குடிநீர் வழங்கு பணிகளில் தொய்வு ஏற்படாதவகையிலும், ஏற்கனவே வழங்கப்பட்ட அனுமதியின்படி, தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.எல். இராஜேந்திரன் என்பவர் தொடர்ந்து 1 மாத காலத்திற்கு 01.10.2022 முதல் 31.10.2022 வரை பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச மதிப்பீடு கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்ட தொகை மற்றும் ESI, EPF, G.S.T உட்பட தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர் விவரம் | மாதம் மொத்த பணியாளர் | 1 நபருக்கு நாள் ஒன்றுக்கான ஊதியம் | மாத மொத்த ஊதியம் |
|---|---|---|---|---|
| 1 | மின் பணியாளர் 3 நபர் | 30 x 3 = 90 | 636 | 57240 |
| 2 | படுகை வடிகட்டி இயக்குநர் (Fitter bed Operator) 3 நபர் | 30 x 3 = 90 | 713.70 | 64233 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | காவலர் 12 நபர் | 30 x 12 = 360 | 385 | 138600 |
| | | | மொத்தம் | 260073 |

**அலுவலகக்குறிப்பு**: 1) **மன்றம் அனுமதிக்கலாம்**.
2) **மேற்படி செலவினத்தை குடிநீர் நிதி** 2022-2023-**இன்கீழ் மேற்கொள்ளவும்மன்றம் அனுமதிக்கலாம்** (**ந.க.எண்**.1136/2020/**இ**2)

தீர்மான எண். 183 அனுமதிக்கப்பட்டது

**ஒப்பம்/- நெ.வனிதாநெப்போலியன்**
நகர்மன்றத்தலைவர்
கம்பம் நகராட்சி.

இடம் :கம்பம்
நாள் 26.10.2022

ஆணையாளர்
கம்பம் நகராட்சி.